بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா**

**18 May 2018 (02 Ramadan 1439 A H)**

# TYPES OF FASTING

# நோன்பு நோற்பு விதங்கள்



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**“நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்க பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்”.** (2 – 184)

இஸ்லாமிய உபவாசம் (நோன்பு நோற்பு) என்பது ஒரு சிறப்பு மிக்க காரியமாகயிருக்கின்றது. பிற மதங்களின் உபவாசங்களை விட முற்றிலும் மாறான ஒன்றாகும் அது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு அல்லாஹ் ஒரு பிரத்தேகமான தரத்தில் பட்ட உபவாசத்தை வழங்கியிருக்கின்றான். அது பிற மதங்களிலுள்ள தூதர்களுக்கு வழங்கியது போன்ற உபவாசமல்ல.

உங்களின் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது என நான் மேற்கூறிய திருமறை வசனத்தில் அல்லாஹ் கூறியிருந்தால் கூட ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் நோன்பு நோற்புக்கு சில நிபந்தனை மற்றும் ஒழுங்கு விதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றது. நோன்பு நோற்கும் ஒருவருக்கு ரமலான் மாதத்தில் செய்யும் ஒவ்வொரு நன்மைக்கும் மிக உயரிய வெகுமதிகள் இருக்கின்றது. அம்மாதத்தில் புரியும் ஒவ்வொரு நன்மைக்கும் 70 நன்மைகளுக்கான கூலி அளிக்கப்படுகின்றது. சாதாரண மாதத்தில் ஒரு நன்மை ஒருவர் செய்தால், அதை ஒரு நன்மையாக மட்டுமே எண்ணப்படுகின்றது. உதாரணமாக பர்ள் தொழுகை, சுன்னத்து தொழுகை, நபில் தொழுகை போன்ற சாதாரண தினங்களில் நாம் புரியும் நல்ல செயல்களை, ரமலான் தினங்களில் நாம் நிறைவேற்றப்படும் நல்ல செயல்களுடன் ஒப்பிடும் போதும், கிடைக்கும் நற்கூலி மிக பெரிதாக இருக்கும். விடியற்காலையில் உணவு உண்ணுவதற்கும், நோன்பு திறப்பதற்கும் மிக பெரிய நற்கூலிகள் வழங்கப்படுகின்றது. நோன்பு நோற்பதற்கான உணவு வகைகளுக்கும், நோன்பு திறப்பதற்கான உணவு வகைகளுக்கும் மிக மிக பெரிய வெகுமதிகள் உள்ளன.

களங்கமற்ற முறையிலும் நேர்மையான நிலையிலும் ஒருவர் நோன்பு நோற்றுக் கொண்டால், நோன்பு நோற்பின் நிபந்தனைகளை அவர் முழுமையாக கடைப்பிடித்துக் கொண்டால், அது வழி, படைத்தவனுக்கு பரிபூரணமாக கீழ்ப்படிந்துக் கொண்டால், ஒரு வேளை அவர் படைத்தவனையே பரிசாகப் பெற்று விடுகின்றார். அல்ஹம் துலில்லாஹ்! ஒரு நபருக்கு நோன்பு நோற்பது மூலம் கிடைக்கும் முற்றிலும் சிறந்த வெகுமதி என்பது அல்லாஹ்வின் அண்மை தான். இதர இறைதூதர்களின் சமுதாயங்களில் (நோன்பு நோற்பதற்கு) இத்தகைய வெகுமதிகள் ஏதாவது இருக்கின்றதா? அல்லாஹ் கூறுகின்றான்.

இமாம் புகாரியும் மற்றும் முஸ்லீமும் ரிப்போர்ட் செய்திருக்கும் குத்சியான ஒரு கதீஸில் காணலாம்.

“நோன்பு நோற்பு எனக்காக உள்ளது. அதற்கான வெகுமதியை நானே வழங்குகின்றேன்”. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் நோன்பு நோற்பின் மகத்துவத்தை நிரூபிக்க இதுவே போதுமானதாகும். அதைப்போன்றே பரிசுத்த “காபா” எல்லா வித மகத்துவத்தினுடையவும் எல்லையாகும். அல்லாஹ்வுடன் அம்மனைக்கு அவ்வளவு தொடர்புள்ளன. அல்லாஹ் கூறுகின்றான். என் மனையை நீ சுத்திகரித்துக் கொள்ள வேண்டும்.

**இரண்டு முக்கிய கருத்துக்களால் நோன்பு நோற்பு நன்மை வாய்ந்ததாக உள்ளன.**

1. இது ஒரு இரகசிய செயலாகும். முற்றிலும் மறைவானது. ஏனென்றால் படைப்பினங்களிலிருந்து எவருக்கும் அதன் இரகசியத்தை கண்டுபிடிக்க முடியாது.
2. இது அல்லாஹ்வின் எதிரிகளை அடிபணியச் செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். ஆதாமின் மக்களை ஏமாற்றுவதற்கு அல்லாஹ்வின் எதிரிகள் கவனம் வைத்திருப்பது ஆசை மீதாகும். உணவு மற்றும் பானம் அவர்களின் ஆசைக்கு வலிமை அளிக்கும். அதனாலேயே நோன்பு நோற்பு அவர்களுக்கு கடினமாகயிருக்கும்.

அதனால் நோன்பு நோற்காதிருப்பதற்கான எல்லா தந்திரங்களையும் அவர்கள் பயன்படுத்துவார்கள்.

1. **மூன்று நிலைகளிலான நோன்பு நோற்பு :**
    1. **பொதுவான நோன்பு நோற்பு**
    2. **திட்டமான நோன்பு நோற்பு**
    3. **மிக சிறந்த நோன்பு நோற்பு**

பொதுவான நோன்பு நோற்பு என்பது வயிற்று தேவை மற்றும் உடல் கூறுகளின் ஆசைகளை நிறைவேற்றுவதிலிருந்து உங்களை தடுத்துக் கொள்ளும். ரமலான் மாதத்தில் இதனை நீங்கள் உணர்ந்துக் கொள்ள முடியும். இந்த நோன்பு நோற்பு வேளைகளில் அதற்கு எதிராக சாத்தான் ஆசை மோகங்களை தூண்டிவிடுகிறவனாக இருக்கிறான்.

**2. திட்டமான நோன்பு நோற்பு :**

a. தடைசெய்யப்பட்ட காரியங்கள் மீது பார்வையிடுவதிலிருந்து அது உங்கள் கண்களை தடுத்துக் கொள்ளும். (இது உங்களை மிக கடுமையான பாவங்களைச் செய்ய தூண்டலாம்).

b. கெட்ட காரியங்களை கூறுவதிலிருந்து அது உங்கள் நாக்கை தடுத்துக் கொள்கிறது. (வீண் பேச்சுகள், சண்டை, வாதங்கள் போன்றவைகள்).

c. கெட்ட காரியங்களைச் செய்வதிலிருந்து உங்கள் கைகளை தடுத்துக் கொள்கிறது. (பிறரை அடித்துக் கொள்ளுதல், திருடல், ஏமாற்றுதல் போன்றவைகள்)

d. தடை செய்யப்பட்ட காரியங்களுக்கு செவிசாய்ப்பதிலிருந்து அது உங்களை தடுத்துக் கொள்கிறது. (இறை வெகுமதிகளை பெறுவதற்கு தடையாகயிருக்கின்ற காரியங்களை கேட்பது, உங்களுக்கு சம்பந்தமில்லாத காரியங்களை கேட்பது போன்றவைகள்).

## 3. மிக சிறந்த நிலையிலான நோன்பு நோற்பு :

மிக சிறந்த நிலையிலான நோன்பு நோற்பு என்பது நாம் இதய பூர்வமாக எல்லா வகையான விருப்பு வெறுப்புகளை தவிர்த்துக் கொள்ளுதல் ஆகும். இவ்வுலகில் காட்சியளிக்கக் கூடிய எல்லா வித காரியங்களிலிருந்தும் நம் இதயங்களை மீட்சியின் பாதையில் நடத்திக் கொள்ள வேண்டும். பின்னர் நம் சிந்தனைகளை அல்லாஹ்வுக்கு நேராக மட்டும் திருப்பிக் கொள்ள வேண்டும். நோன்பு நோற்பின் மிக முக்கியமான சிறப்பு, நாம் நமது பார்வையில் செம்மையான தெளிந்த நோக்குதல் உடையவர்களாக இருப்பது மற்றும் நாவின் வன்மையினை கட்டுப்படுத்துவது என்பதாகும். பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு முன்பு மிக நன்றாக சிந்தித்துக் கொள்ள வேண்டும். உங்களின் நாவால் எவருக்கும் எந்த கவலையும் கொடுக்கும் வார்த்தை வரக் கூடாது என உறுதிப்படுத்த வேண்டும். சுருக்கமாக உங்களின் எல்லா உடல் உறுப்புகள் மீதும் உங்களுக்கு முழுமையான கட்டுபாடு இருக்க வேண்டும். அது மிக முக்கியம் வாய்ந்த காரியமாகும். எவர் ஒருவர் தீய செயல்களை தவிர்த்துக் கொள்வதில்லையோ, அதாவது சண்டை போடுதல், ஒற்றுதல், சந்தேகம் கொள்தல், பொறாமை கொள்தல், பொய் கூறுதல் பேன்றவைகளை கைவிட்டுக் கொள்வதில்லையோ அந்நபர் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக உணவு மற்றும் பானியங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டியதில்லை. இக்காரியங்கள் கதீஸீகளில் தெளிவாக உள்ளது.

நோன்பு நோற்பின் மற்றொரு சிறப்பியல்பு நோன்பில் மூழ்கியவர் தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதில்லை மாறாக தனக்கு தேவையான உணவினை மட்டும் புசித்துக் கொள்கின்றார். ஏனெனனில் ஆதம் (அலை) மின் மக்களுக்கு தங்களது வயிற்றை விட மோசமான வேறெந்த பாத்திரமும் நிரப்புவதற்கு வேறில்லை. இரவு ஆரம்பிக்கின்ற போதுதான் தனது வயிற்றை நிரப்புவதற்கு தேவையான உணவுகள் இருக்கின்றது என்றால் அவரது உடலை இரவில் நன்கு பயன்படுத்திட முடியாது. அதை போன்றே விடியற்காலம் தேவைக்கும் அதிகம் புசித்துக் கொண்டால் மறுநாள் மத்தியானம் வரையில் அவருக்கு நன்கு செயல்பட இயலுவதில்லை. அதிகமான அளவு உணவினை உட்கொள்வது

மனிதனுக்கு சோம்பல் மற்றும் சோர்வினை கொடுக்கும வகையில் அமையும். அதோடு இவ்வுணவு பழக்க நிலையானது நோன்பு நோற்பின் நோக்கத்தினை அழித்து விடுகிறது. நோன்பு நோற்பின் இலக்கு என்னவெனில் பசியின் ருசி என்ன என்பதனை அறிந்துக் கொள்வதற்கான நம்முடைய உடலின் உணவு விருப்பங்களை நாம் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளை தேடிக் கொள்வதாகும்.

புத்திசாலியான ஒரு மனிதன் நோன்பு நோற்பின் இலட்சியம் என்ன என்பதை உணர்ந்துக் கொள்கிறான். நோன்பு நோற்பது தனக்கு நன்மை தருவது என்றும் தன்னை முன்னேற்ற நிலைக்கு கொண்டு செல்வது எனவும் பகுத்தறிகின்றான். இந்நோன்பின் மூலம் தனக்கு ஏற்படுகின்ற எத்தகைய துயரமான நிலையினையும் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்கின்றான். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் மிக அரிதாகவே நோன்பு நோற்றிருந்தார். அதற்கு காரணமாக அன்னார் கூறியதாவது நோன்பு நோற்கும் போது நான் (அதாவது கட்டாயமில்லாத நோன்பு) மிக சோர்ந்து போகின்றேன். அது எனது தொழுகைக்கு பாதகத்தை ஏற்படுத்துகின்றது. நான் கட்டாயமில்லாத நோன்பு நோற்பை விட தொழுகைக்கு முன்னுரிமை அளிக்கின்றேன். மற்றொரு வார்த்தையால் கூறிக் கொண்டால், அன்னார் கட்டாயமான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொள்ளவும் கட்டாயமல்லாத செயல்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்காமலிருக்கவும் செய்கின்றார் என சுருக்கம்.

சில தோழர்கள் நோன்பு நோற்பு வேளைகளில் திருக் குர் - ஆனை வாசிப்பதில் அதிகமான கவனத்தை செலுத்திக் கொண்டதன் மூலம் அவர்கள் சோர்வடைந்தனர். அவ்வாறு அவர்கள் நோன்பு நோற்றனர். அவர்களின் ஓதுதலில் சமநிலையினை அடைவதற்காக! ஓவ்வொருவரும் உணர்ந்துக் கொள்ள வேண்டிய காரியம், தங்களின் ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றிற்கு உகந்த வகையில் திருக் குர் - ஆன் ஓதிக் கொள்ள வேண்டும். இதர ஆராதனை செயல்கள் புரிய வேண்டும் என்பதாகும்.

நபி (ஸல்) அவர்களின் ஒரு தோழர் ரிப்போர்ட் செய்திருப்பதாக காணாலாம். அல்லாஹ்வின் தூதர் ரமலான் மாதத்தில்

கூறுவதை நான் கேட்டேன். “நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டது. சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டது. சாத்தான்களை சங்கிலிகளால் கட்டப்பட்டது. ஒரு வானவர் சத்தமாக கூறுகிறார். நன்மை செய்ய விரும்புகின்றோர்களே உங்களுக்கு இதோ ஒரு நற்செய்தி! தீய செயல்கள் செய்ய விரும்புகின்றோர்களே நீங்கள் பின் திரும்பிக் கொள்ளுங்கள். ரமலான் முழுமையடையும் வரையிலாவது! (அஹமது, நசாயி)

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பு, நரகத்திலிருந்து பாதுகாப்பை பெறுவதற்கான ஒரு கேடயமாகும். இறை தூதர் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். சொர்க்கத்தையும், நரகத்தையும் படைத்த போது இறைவன் ஜிப்ரீலை சொர்க்கத்தில் அனுப்பி வைத்தான். அந்நேரம் ஜிப்ரீலிடம் இறைவன் கூறியதாவது “சொர்க்கத்தை சென்று பார்த்துக் கொள். சொர்க்கத்தில் நுழைந்து விடுபவர்களுக்காக என்னென்ன நான் அதில் படைத்திருக்கின்றேன் என்பதை பார்த்துக் கொள்” அதன் படி ஜிப்ரீல் சென்று பார்த்தப்பின் திரும்பி இறை சன்னிதியில் வந்து கூறியது.

“உன் மகத்துவம் மீது ஆணையாக! அதில் நுழையாத வரையில் எவருக்கும் அதைப் பற்றிய எந்த அறிவும் இருக்காது. அந்நேரம் இறைவன் மேலும் கட்டளை விடுத்தான். “சொர்க்கத்தை நான் மிக சிரமங்களால் சூழப்பட்டதாக படைத்திருக்கின்றேன் அதையும் சென்று பார்த்து வாருங்கள். அதன்படி ஜிப்ரீல் மறுபடியும் சென்று அதை பார்த்தப்பின் இறை சன்னிதிியில் திரும்பி வந்து கூறியதாவது “உன் மகத்துவம் மீது ஆணையாக! அதில் எவரும் நுழைய மாட்டார்கள் என நான் அஞ்சுகின்றேன்”. அல்லாஹ் மேலும் கூறினான் நீ சென்று நரகத்தை பார்த்து வாருங்கள். அதன்படி ஜிப்ரீல் அங்கு சென்று நரகத்தை பார்வையிட்ட பின்னர் திரும்பி வந்து இறைவனிடம் கூறியது. “உன் மகத்துவம் மீது ஆணையாக! அதில் நுழையாத வரையில் அதைபற்றிய அறிவு எவருக்கும் இருக்காது”. மேலும் அல்லாஹ் கட்டளை விடுத்தான் “நான் அதை ஆசைகளால் சூழப்பட்டதாக படைத்திருக்கின்றேன் அதையும் சென்று பார்த்து வாருங்கள். அதை பார்த்த பின் திரும்பி வந்த ஜிப்ரீல் இறைவனிடம் கூறியது. “உன்

**மகத்துவம் மீது ஆணையாக! அனைவர்களும் அதில் நுழைந்து விடுவார்கள். அதிலிருந்து எவரும் இரட்சிப்பை பெறமாட்டார்கள் என நான் அஞ்சுகின்றேன்" (திர்மிதி,ஹாக்கீம்).**

இஸ்லாமிய நம்பிக்கையை சார்ந்த எனது சகோதர – சகோதரர்களே! நோன்பு நோற்பு நம் மன விருப்பங்களையும், ஆசைகளையும் அளிக்க செய்கிறது. அது நரகத்தின் கொடூரத்தை எளிதாக்கி தருகின்ற நிலையில் அமைகிறது. ஆசைகள் என்பது நம்மை நரகத்திற்கு அழைத்து செல்கிறது. நரகத்திற்கும் உங்களுக்கும் இடையில் நோன்பு நோற்பு எவ்வாறான நிலையினைக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்தவர்களாக இருந்திருப்பீர்களானால் ரமலான் மாதத்தில் மட்டுமல்லாது பின்வரும் நாட்களிலும் நீங்கள் நோன்பு நோற்றிருப்பீர்கள்.

நோன்பு நோற்பது மூலம் பெறும் வெகுமதிகளைக் குறித்து திருமறை நம்மை கற்பிக்கின்றது. அல்லாஹ்வுக்கு கட்டுபடுகின்றோர்கள் நரகத்திலிருந்து பாதுகாப்பை பெறுவார்கள் என நம்மை அது கற்பிக்கின்றது. நோன்பு நோற்பு அல்லாஹ்வுக்கு கட்டுபட்டு கொள்வதன் ஒரு முறையாகும். இது சம்பந்தமான ஏராளம் நபி மொழிகள் நமக்கு வெளிச்சம் பகிர்கின்றது.

**"நோன்பு நோற்பது ஒரு கேடயம் போன்றதாகும். அக்கேடயம் அவரை நரகத்திலிருந்து பாதுகாக்கின்றது"** (அஹமது)

**"அல்லாஹ்வின் வழியில் ஒருவர் ஒரு தினம் நோன்பு நோற்றால் அவருக்கும் நரகத்திற்கும் இடையிலான தூரம் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைப் போன்றாகும்"**

(திர்மிதி, தபரானி)

**"ரமலான் மாதத்தின் முதல் நாள் இரவு ஆரம்பித்து விட்டால் சாத்தான் மற்றும் மறுத்துக் கொள்பவர்களாகிய ஜின்கள் கைதிகளாக்கப்படுகின்றனர். அந்நிலையில் நரகத்தின் வாசல் மூடப்படுகிறது. அதன் எந்த வாசல்களும் திறக்கப்படாது. சொர்க்கத்தின் வாசல் திறந்து விடும். அதன் எந்த வாசல்களும் அடைப்படுவதில்லை.**

அந்நேரம் அழைப்பு விடுக்கும் ஒருவர் இவ்வாறு அழைப்பார், நன்மை செய்பவர்களே! நீங்கள் நன்மை பலனால் முன்னேறிக் கொள்ளுங்கள்.! தீமை செய்பவர்களே! அதை உடனே நிறுத்தி விடுங்கள்! அல்லாஹ் சிலரை நரகத்திலிருந்து காப்பாற்றிக் கொள்கின்றான். அது எல்லா இரவிலும் நிகழ்பவையாகும்”

(திர்மிதி,இப்னுமாஜு)

“ரமலான் மாதத்தின் எல்லா ஒவ்வொரு இரவிலும், பகலிலும் நரகத்திலிருந்து அல்லாஹ் மக்களுக்கு மீட்சியை அளிக்கின்றான். ஒரு முஸ்லீம் சமர்பிக்கின்ற ஒவ்வொரு பிரார்த்தனைகளுக்கும் இறைவன் பதில் அளிக்கின்றான்”

இந்த ரமலான், நமக்கு நரகத்திலிருந்துள்ள ஒரு பாதுகாப்பாக அமைய நமக்கு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வோம். ஆமீன், சும்ம ஆமீன், யா ரப்பல் ஆலமீன்! இன்ஷா அல்லாஹ்!

ஜும்மா தொழுகைக்கு பிறகு நாம் ஒரு ஜனாஸா காயிப் தொழுகை நடத்திக் கொள்ளயிருக்கின்றோம். இந்தியாவில், கேரளா மாநிலத்தின் தென்மண்டல அமீர் முகர்ரம் ஆர் ஜமாலுத்தீன் ராவுத்தர் சாஹிப்பின் முதல் மனைவியும், எனது பிரியமான, மதிப்பிற்குரிய அன்பு சகோதரியும் சீடருமாகிய ஷரீபா பீபி சாஹிபா(1951 – 2018) இயற்கை எய்தியுள்ளார். அல்லாஹ்விட மான இப்பயணத்தில் அவரின் பாதையை அவன் ஒளிர செய்வானாக! இறைவனையே அவர் வெகுமதியாக பெற்றுவிடட்டும்! ஆமீன்.

இன்ஷா அல்லாஹ்! அவரின் அன்புக்குரிய புதல்வனாகிய பசில் ஜமால் சாஹிப் அவர்கள் தம் தாயின் வாழ்க்கை மற்றும் செயல்களைக் குறித்த ஒரு நினைவூட்டுச் செய்தியை நமது ஜமா அத்தின் Blog – ல் கொடுக்க உள்ளார். அதை உங்களுக்கு வாசித்துக் கொள்ளலாம். ஜமா அத்துல் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த அனைவர்கள் மீதும் அல்லாஹ் அருள் பொழிவானாக! குறிப்பாக அல்லாஹ்விடமும், அவனது தூதராகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடமும், இந்நூற்றாண்டில் உங்களுக்காக தோற்றுவித்த

கலீஃபத்துல்லாஹ்விடமும் கட்டுபாடுடன் நடந்துக் கொண்டதற்காக உங்கள் அனைவருக்கு அல்லாஹ் அருள் புரியட்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

## அனைவருக்கும் ரமலான் நல்வாழ்த்துகள்!


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239, 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** **jamal.raother@gmail.com**
**Phone:** 9447001832, 04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in